**மதவாச்சி பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

## 01. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 06 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 06 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 03 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மதவாச்சி பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அனுமதிப்பத்திரக் கட்டண பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 1,362,406 தொகையான வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்கள், வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 1,663,646 எனக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 134,810 ஆன அட்டுறுச் செலவினத்திற்காக நிதிக்கூற்றுக்களில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 14,939,587 ஆக இருந்த போதிலும், அத்திகதியில் உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதத்தின் பிரகாரம் கடன் மீதி ரூபா 6,038,592 ஆக இருந்தமையால் ரூபா 8,900,995 ஆன வேறுபாடொன்று கண்டறியப்பட்டது.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் சபையின் செயற்பாட்டு மிகை ரூபா 4,864,377 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 7,205,412 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வீதவரி

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,098,459 ஆன நிலுவை வீத வரியை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 155 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 வாடகை

(அ) 07 கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்காக மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 962,077 ஆன நிலுவை வாடகையை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது சந்தை மற்றும் வியாபார கடைத்தொகுதி கடை வாடகையாக அறவிடப்பட வேண்டிய ரூபா 957,862 தொகையை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை வருடாந்த வியாபார உரித்தை குத்தகையிலிருந்து ரூபா 1,181,142 ஆன நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்ட போதிலும், அப்பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 10 வருட காலம் கடந்திருந்த காலப்பகுதியிலிருந்து பொது வியாபார சந்தையில் 23 கடைகளில் வியாபாரங்கள் இடம்பெறாமையால் கடை உரிமையாளர்கள் கடைகளை விட்டுச் சென்ற காரணத்தினால் சபைக்கு கிடைக்காமல் போன வாடகை வருமானம் ரூபா 2,070,000 என அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 725,790 தொகையான நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டண வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 முத்திரைக் கட்டணம்

2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 3,821,500 ஆன முத்திரைக் கட்டணங்களை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1995 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை காலப்பகுதியில் இடமாற்றம் பெற்றுச்சென்ற, ஓய்வுபெற்ற மற்றும் சேவையை விட்டுச்சென்ற 13 ஊழியர்களின் அறவிடப்பட வேண்டிய ரூபா 201,212 தொகையான ஊழியர் கடன் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 03 முதல் 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த ரூபா 17,497,678 தொகையான கிடைக்க வேண்டிய 06 கணக்கு மீதிகள் மீளாய்வாண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 03 முதல் 07 ஆண்டுகளை விஞ்சியிருந்த ரூபா 3,309,311 தொகையான செலுத்த வேண்டிய 06 கணக்கு மீதிகள் மீளாய்வாண்டின் போது தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நாகதரநெவ கிராம சபை கட்டிடம் மற்றும் அக்காணி 20 ஆண்டுகள் அளவில் அனுமதியற்ற நபர் ஒருவர் குடியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டதுடன் அந்நபரை அகற்றுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 1,648,500 பெறுமதியான 2 வாகனங்கள் மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் (203 அதிகாரம்) 2(1) பிரிவின் பிரகாரம் பதிவு செய்யப்படாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற சொத்துக்கள்**

(அ) நிதிக்கூற்றுக்களின் பெறுமதி வெளிப்படுத்தப்படாத 06 காணி மற்றும் கட்டிடங்கள் 02 முதல் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) 1998 ஆம் ஆண்டின் போது சபைக்கு கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 1,232,000 தொகையான இரண்டு வாகனங்கள 10 ஆண்டு காலமாக பழுதடைந்து விளைவற்றுக் காணப்பட்டன.

### 3.3 தாமதமடைந்த செயற்திட்டங்கள்

(அ) பிரதேச சபைகளைப் பலப்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ரூபா 2,000,000 தொகையான 05 செயற்திட்டங்களின் நிதி முன்னேற்றம் 100% குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அச்செயற்திட்டங்கள் 2016 மே 09 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 இன் மாகாண திட்டவட்டமான நிதிஏற்பாடுகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருந்த பின்னடைந்த அழகு கிராமங்களை அபிவிருத்தி செய்யும் 15 செயற்திட்டங்களுக்கிடையே ரூபா 2,000,000 தொகையான 12 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.4 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் மற்றும் திண்மக் கழிவுப் பொருட்கள் இசின்பெஸ்கம வனப் பகுதிக்கு இடப்படுகின்றதுடன் கழிவுப் பொருட்ளை உணவாக கொள்ள வரும் யானைகளால் சுத்திகரிப்பு ஊழியர்களுக்கும் சுற்றியுள்ள பிரதேச வாசிகளுக்கும் பிரச்சினையொன்றாக இருந்ததுடன், சுற்றாடலுக்கும் பாதிப்பினை ஏற்படுத்தப்பட்டு வந்தது

## 04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்.
(ஈ) கடன்பட்டோர் /கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம்